(ஆ) வினாக்களை வெள்ளிக் குறியிடாதவையாக ஆக்கல்.

திரு. கே. விநாயகம் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், மேஜைமீது 'அன்ஸ்டார்ட்' கேள்விகளுக்கான 'சேட்லாக்' வைக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் கேள்விகள் போடும்பொழுதெல்லாம் விளக்கம் தேவைப்படுகின்ற காரணத்தினால் கேள்வியை மட்டும் போட்டு, 'சப்ளிமெண்ட்ரி'யை' எழுதாமல் இங்கு வந்து கேட்டுக்கொள்ளலாம் என்று நினைக்கிறோம். "On the floor of the House" கேட்க உரிமை உண்டு. எங்களைக் கேட்காமலேயே ஒரு சில கேள்விகளை 'அன்ஸ்டார்ட்' ஆகச் செய்துவிட்டார்கள். அப்படி உங்களுக்கு செய்ய உரிமை இருக்கிறது, அதை யாராவது மறுப்பார்களா? அந்தத் துணிவு எங்களுக்கு இல்லை. நான் சொல்வது, எங்களுடைய உரிமை பாதிக்கப்படுகிறது. நாங்கள் விளக்கம் கேட்கவேண்டுமென்றால் 'சப்ளிமெண்டரி' கேள்விகளுக்கு இடமில்லாமல் போய்விடுகிறது. நாங்கள் கேள்விகள் போடுவதன் நோக்கமே 'the very purpose of our tabling the questions is defeated' ஆதலால் அப்படி 'அன்ஸ்டார்ட்' ஆகச் செய்யும்பொழுது இப்படிச் செய்யப்போகிறோம் என்று எங்களைக் கேட்டுச் செய்தால் நன்றாக இருக்கும். உதாரணமாகச் சொல்லவேண்டுமென்றால் ஒரு கேள்வியைச் சொல்லுகிறேன். என்னுடைய பெயரால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் திருப்பி 'ஸ்டார்ட்'—ஆக மாற்ற அனுமதிப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லையே. பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுந்துகொண்டு எதையெதையோ கூறி விடுகிறார்கள். அதுதான் வேண்டாமென்று சொல்கிறேன். பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுந்துகொண்டு தாங்கள் என்னென்ன கூறவேண்டுமோ அவ்வளவையும் கூறிவிடுவது என்பது முறையாகாது. நீங்கள் அனுப்பக்கூடிய கேள்விகளை நட்சத்திரக்குறியிடாத கேள்வியாக மாற்றியமைக்கும் உரிமையும் பேரவைத் தலைவருக்கு இருக்கிறது. அந்த உரிமை இருக்கிறது என்ற காரணத்தினால் அதைத் தப்பான முறையில் பயன்படுத்தமாட்டார்கள். விதிமுறைகளில் என்னென்ன கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அதையொட்டித்தான் நீங்கள் கேட்கும் கேள்விகளை நட்சத்திரக் குறியிடாத கேள்விகளாக ஆக்கியிருக்கிறார்கள். அப்படி ஏதாவது ஒன்றிரண்டுக் கேள்விகளை மாற்றவேண்டுமென்றால் என்னுடைய அறையிலே வந்து கேட்கலாம். அதை மறு பரிசீலனை செய்யும்படி பேரவைத் தலைவருக்கு எழுதிக் கொடுக்கலாம், அதை இந்த அவையிலே கேட்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(இ) வினாக்களுக்கு விடையளிப்பதில் தாமதம்

திரு. வி. கே. கோதண்டராமன் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். அறையிலே வந்து கேளுங்கள். அறையிலே வந்து கேளுங்கள் என்று சொல்கிறீர்கள். அறையிலும் வந்து பலமுறை கேட்டிருக்கிறேன். இந்த இரண்டு வருஷ காலத்திலே ஏறக்குறைய ஆயிரம் கேள்விகள் கேட்டிருக்கிறேன். ஒரு வருஷத்திற்கு மேற்பட்ட கேள்விகள் எல்லாம் உண்டு. கூட்டுறவு இலாக்கா ரொம்ப ஊழல் மிகுந்த இலாக்கா, அது சம்பந்தமாக கேள்விகள் இருக்கின்றன. எனவே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பே இந்தப் பேரவையில் சொல்லியிருக்கிறேன். இலாக்காவைக் கேட்டிருக்கிறோம். ஒவ்வொரு உறுப்பினரும் எவ்வளவு கேள்விகள் கேட்டிருக்கிறார்கள், அனுமதிக்கப்பட்ட கேள்விகள் எவ்வளவு தள்ளிவிடப்பட்ட கேள்விகளின் எண்ணிக்கை எவ்வளவு, எந்தெந்த அமைச்சர்களிடத்திலே உள்ள கேள்விகள் என்று தெரிந்துகொண்டு அவர்களைத் துரிதமாக விடையளிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அதற்கு மாறாக பலமுறை கேட்டு வரவில்லை என்று சொல்வது சரியல்ல. அந்த நிலை உண்டாகவில்லை. அப்படி ஏதேனும் கேட்க வேண்டுமென்றால் என்னுடைய அறையிலே வந்து கேட்கவேண்டும்.